மேற்கண்ட நிதிக் கோரிக்கைகள் பேரவையின் முடிவுக்கு விடப் பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

8. அறிவிப்பு

தமிழ்நாடு, 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுப்பதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. அரசினர் மசோதாக்கள்

தமிழ்நாடு, 1970 ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—"That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation Bill, 1970 ".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் பேரவையினுடைய இன்றைய நிகழ்ச்சிகள் முடி
பி. ப. 1-04 வுற்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

(10) பேரவையின் முன்வைக்கப்பட்ட ஏடுகள் ஏதுமில்லை.

இணைப்பு—I

[461-ம் பக்கத்திலுள்ள 79-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க]

(அ) மானியம் பெறும் தனியார் பள்ளிகளுக்கு மட்டுமே பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.

(இ) மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று சம்பளங்கள் கொடுக்க வகை செய்யும்பொருட்டு பணியாளர் மானியம் (staff grant) போதுமான அளவு முன்னதாகவே வழங்கப்படுகிறது. நகராட்சி தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பணியாளர்களுக்குச் சம்பளம் நகராட்சி நிதியிலிருந்தே

1970 ஜனவரி 27]

கொடுக்கப்படுகின்றது. இதற்கான மானியம் ஆண்டுதோறும் கணக்குகளைத் தணிக்க செய்த பிறகே வழங்கப்படுகிறது. நகராட்சி மன்றங்கள் அவைகளுடைய பணியாளர்களுக்கு மாத முதல் தேதியன்று ஊதியம் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஊராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியக் குழுக்கல் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒரு மொத்தத் தொகையாகப் பெறும் விகிதத்தில் மானியங்களைக் கல்வித்துறை வழங்குகின்றது. ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மாதத்தில் முதல் மூன்று வேலை நாட்களுக்குள் ஊதியங்களைக் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள மானியம் பெறும் தொடக்க நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் மாவட்டக் கல்வி அதிகாரி ஒவ்வொரு மாதமும் ஆசிரிய மானியத்தைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஆணையாளருக்கு அனுமதிக்கிறார். அந்த ஆணையாளர் மாத இறுதிக்குள் காசோலையை வழங்குகிறார். பள்ளி மேலாளர் அந்தக் காசோலையை மாத முதல் தேதியன்று பணமாக மாற்றி ஆசிரியர்களுக்குச் சம்பளங்களைக் கொடுக்கின்றார்.

(*a*) Instructions have been issued by the Director of School Education only in the case of private aided schools.

(*b*) In the case of aided secondary schools, staff grant is released sufficiently early to enable the disbursement of salaries on the 1st of every month. In the case of municipal elementary and secondary schools, payment of salaries to the staff is made from municipal funds and grant released annually after audit of the accounts. Municipal councils are expected to pay to their staff on the 1st of the month. In the case of panchayat schools, grants are so disbursed by the Education Department that the panchayat union councils get lump-sum amounts once in three months. The panchayat union councils are expected to make payments within the first three working days of the month. For the aided primary schools lying in panchayat union areas the District Educational Officer sanctions the teaching grant every month to the Commissioner of the panchayat union council concerned and he issues the cheques by the end of the month. The manager of the school encashes the cheque on the 1st day of the month and disburses the salaries to the teachers.

இணைப்பு II.

[469-ம் பக்கத்திலுள்ள 83-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

Resolutions.	*Action taken.*
1. **General**: Requesting the Government to sympathise with the lot of weavers and agree to their demands.	The Government have been showing utmost sympathy towards the Handloom Sector.